## 2025.09.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. இலங்கை தேசிய காலநிலை நிதி மூலோபாயம் (2025-2030)

காலநிலையுடன் தொடர்புடைய அனர்த்த நிலைமைகளுக்கு ஆளாக வேண்டிய அதிக இடர்களுடன் கூடிய நாடாக இலங்கை, Global Climate Risk Index மூலம் அடையாளங் காணப்பட்டுள்ளது. காலநிலை மாற்றங்களால் ஏற்படுகின்ற தீமைபயக்கும் விளைவுகளால், இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஆண்டுதோறும் 2% சதவீதத்திற்கும் அதிகமான தொகை இழக்கப்படுவதாக எதிர்வுகூறப்படுகின்றது. அதனால், காலநிலை மீட்சித்திறன் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புவதற்காக, அண்ணளவாக 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருடாந்தம் அரசால் முதலீடு செய்யப்பட வேண்டுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தியில் 0.5% சதவீதமான குறித்த செலவை தேசிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஈடு செய்வதற்கான இயலுமை இல்லை. அதனால், காலநிலை மாற்றங்களைக் குறைத்தல் மற்றும் இசைவாக்கமடைவதற்காக பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள், குறிப்பாக மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி, விவசாயம், கடற்றொழில் மற்றும் காலநிலை – மீட்சித்திறன் உட்கட்டமைப்பு வசதிகள் மூலம் குறிப்பிடத்தக்களவு முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்காக வழக்கமான வரவு செலவுத்திட்ட நிதியிடலுக்கு அப்பால் நிதி திரட்டுவதற்கு இயலுமாகும் வகையில் மிகவும் கட்டமைப்பு ரீதியானதும் முறையான அணுகுமுறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் காலநிலை மீட்சித்திறன் மற்றும் குறைந்த காபன் துறைகளுக்கு தனிப்பட்ட முதலீடுகளை திரட்டக்கூடிய பசுமை முதலீடுகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய வகையிலான சூழலை உருவாக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறான அணுகுமுறையொன்று தேசிய காலநிலை முன்னுரிமைகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதுடன், சர்வதேச காலநிலை தொடர்பான கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதை உறுதி செய்யும். குறித்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு, சுற்றாடல் அமைச்சு, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் உள்ளிட்ட 35 அரச நிறுவனங்களின் பங்களிப்புடன், மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் “இலங்கை தேசிய காலநிலை நிதி மூலோபாயம் (2025-2030)” தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை தேசிய காலநிலை நிதி மூலோபாயம் (2025-2030) இனை வெளியிடுவதற்கும், பின்னர் குறித்த நிதி மூலோபாயத்தை மேம்படுத்தவும், அமுல்படுத்தவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 02. தேசிய தேச எல்லைகளுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் சமுத்திர உயிர்ப்பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் பேண்தகு பயன்பாடு தொடர்பான சமுத்திரச் சட்டங்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்தின் கீழான ஒப்பந்தத்தை ஏற்று அங்கீகரித்தல்

தேசிய தேச எல்லைகளுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் சமுத்திர உயிர்ப்பல்வகைமை தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும், அதற்குரிய அமைச்சுக்களுக்கிடையிலான குழுவொன்றை நியமிப்பதற்கும் 2024.12.23 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை 2025.02.20 அன்று ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டுள்ளதுடன், குறித்த ஒப்பந்தத்தை வலுவாக்கம் செய்கின்ற முதல் 60 நாடுகளில் உறுப்பு நாடாக இணைந்து கொள்வதன் மூலம், சமுத்திர வளங்கள் பாதுகாப்பு, பேண்தகு பயன்பாடு மற்றும் அவற்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அனுகூலங்களை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளல் உள்ளிட்ட நன்மைகள் பலவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை உண்டு. அதற்கிணங்க, தேசிய தேச எல்லைகளுக்கு அப்பால் அமைந்துள்ள பிரதேசங்களில் உயிர்ப்பல்வகைமை பற்றிய ஒப்பந்தத்தை ஏற்று அங்கீகரிப்பதற்காக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 03. குள அடுக்குத் தொகுதிகளிலுள்ள பேண்தகு வகையிலான தொழிற்பாட்டை உறுதி செய்தல்

இலங்கையின் உலர் வலயங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீரேந்துப் பிரதேசங்களில் காணப்படுகின்ற குளங்கள் ஒன்றுடனொன்று தொடர்புடைய வகையிலான தொகுதியே குள அடுக்குத் தொகுதி என அழைக்கப்படுகின்றது. இலங்கையின் நீர்ப்பாசன நாகரிகத்தில் மிகவும் சிறந்த படைப்பாக அமைந்துள்ள குள அடுக்குத் தொகுதி, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO) இனால் உலக மரபுரிமையாக பெயரிடப்பட்டுள்ளது. குள அடுக்குத் தொகுதியைப் பாதுகாப்பதற்காகவும், குள அடுக்குத் தொகுதியை பேண்தகு திட்டமொன்றுடன் அபிவிருத்தி செய்வதற்கும், அதன் நன்மைகளை சமூகமயப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது சமகாலத் தேவையெனக் கண்டறியப்பட்டுள்ளது. சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் சமநிலையைப் பாதுகாக்கின்ற இக்குள அடுக்குத் தொகுதி சார்ந்த பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற விவசாயிகள் உள்ளிட்ட ஏனைய பங்காளர்களின் முனைப்பான பங்களிப்பைப் பெற்றுக்கொண்டு குறித்த தொகுதியைப் பாதுகாத்து முகாமைத்துவம் செய்வதற்கான வசதிகளை வழங்குவதற்காக “குள அடுக்குத் தொகுதி முகாமைத்துவக் குழுவை” நியமிப்பதற்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் 06/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. குறித்த சுற்றறிக்கையின் ஆலோசனைகளை மிகவும் பொருத்தமான வகையில் திருத்தம் செய்து, குள அடுக்குத் தொகுதி முகாமைத்துவக் குழுவை நியமித்தல், குள அடுக்குத் தொகுதி முகாமைத்துவத் திட்டத்தை அமுல்படுத்தல் மற்றும் குறித்த குழுச் செயன்முறையை மிகவும் முறைசார்ந்த வகையில் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி

அமைச்சுடன் இணைந்து புதிய சுற்றறிக்கையை வெளியிடுவதற்கும், குறித்த சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளை சட்டபூர்வமாக்குவதற்கு ஏற்புடைய வகையில் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முதலீட்டாளர்களுக்கு பிராந்திய கைத்தொழில் பேட்டைகளில் காணிகளை வழங்கல்

1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அமைக்கப்பட்டுள்ள “பிராந்திய கைத்தொழில் சேவைக் குழு” மூலம் மற்றும் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ள “அமைச்சுக் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு” மூலம் கைத்தொழில் பேட்டைகளில் முதலீடு செய்வதற்காக முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்படுவர். அதற்கமைய, பிராந்திய கைத்தொழில் சேவைகள் குழுவால் விதந்துரைக்கப்பட்டுள்ள 42 கருத்திட்டங்களில் 38 முதலீட்டு கருத்திட்டங்களுக்கு காணித் துண்டுகளை ஒதுக்குவதற்காக அமைச்சின் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு விதந்துரைத்துள்ளது. குறித்த 38 முதலீட்டாளர்களால் முதலீடு செய்யப்படவுள்ள மொத்தத் தொகை 2,548.22 மில்லியன் ரூபாய்களாகும். அத்துடன், குறித்த தொழிற்றுறைக் கருத்திட்டங்கள் மூலம் 1,559 நேரடி வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, குறித்த முதலீட்டாளர்களுக்கு உயர்ந்தபட்ச 35 வருடங்கள் குத்தகை அடிப்படையில் குறித்த கைத்தொழில் பேட்டைகளில் காணித்துண்டுகளை வழங்குவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. 78 ஆவது சுதந்திர தின வைபவத்திற்கான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்காக அமைச்சரவை உபகுழுவை நியமித்தல்

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையைக் கருத்தில் கொண்டு, 2026.02.04 அன்று 78 ஆவது சுதந்திர தின வைபவத்தின் ஏற்பாடுகள் மற்றும் செயற்பாடுகளுக்காக கௌரவ பிரதமர் அவர்களின் தலைமையிலும் மற்றும் கௌரவ அமைச்சர்களின் பங்கேற்பில் அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. தேசிய மின்சாரக் கொள்கை மற்றும் கொள்கை வழிகாட்டியை வெளியிடுவதற்கான குழுவை நியமித்தல்

2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மின்சார (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, வலுசக்தி தொடர்பான தேசியக் கொள்கையின் ஒரு பகுதியாக தேசிய மின்சாரக் கொள்கை வரைபைத் தயாரிப்பதற்காக வலுசக்தி தொடர்பான கொள்கையைத் தயாரித்தல், மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் வலுசக்தி நிலைமாற்று,

வலுசக்தி தொகுதியைத் திட்டமிடல், பொருளியல் மற்றும் நிதி தொடர்பான துறைகளில் குறைந்தது 15 வருடங்கள் நிபுணத்துவ அறிவுடன் கூடிய நபர்கள் 08 பேரை விஞ்சாத உறுப்பினர்களுடன் கூடியவாறு குழுவொன்றை விடயதான அமைச்சர் அவர்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நியமித்தல் வேண்டும். அதற்கிணங்க, கீழ்வரும் நபர்களுடன் கூடிய குறித்த குழுவை நியமிப்பதற்காக வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- பேராசிரியர் மொஹான் முனசிங்க அவர்கள்,
- ஜனாதிபதி சட்டத்தரணி மிலிந்த குணதிலக்க அவர்கள்,
- பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா அவர்கள்,
- பொறியியலாளர் டப்ளிவ்.ஜே.எல்.சவீந்திரநாத் பர்னாந்து அவர்கள்,
- கலாநிதி எச்.எம்.குணதிலக்க அவர்கள்

**07. 2026 ஆம் ஆண்டுக்கான பாடசாலைப் பாடப் புத்தகங்கள்/பாட அலகுகளை அச்சிடல்**

2026 ஆம் ஆண்டுக்கான பாடசாலைப் பாடப் புத்தகங்கள்/பாட அலகுகளில் 40% சதவீதமானவை அரச அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு அச்சிடுவதற்காக 2025.06.16 அன்று அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, மேலும் 366 பாடப் புத்தகங்கள்/பாட அலகுகள் இற்கான 27.12 மில்லியன் பிரதிகள் அச்சிடப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, தேசிய போட்டி விலைமனு முறைமையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 29 நிறுவனங்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ளன. அதற்கமைய, உயர்மட்ட பெறுகைக் குழுவின் விதந்துரைகளுக்கமைய, 3,491.47 மில்லியன் ரூபாய்கள் செலவில் குறித்த 29 நிறுவனங்கள் மூலம் 366 பாடப் புத்தகங்கள்/பாட அலகுகளின் 25.49 மில்லியன் பிரதிகளை அச்சிட்டுப் பெற்றுக்கொள்வதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. அபிவிருத்தி லொத்தர் சபைக்கு ஒரு வருடகாலத்திற்கு கணணிசார்ந்த லொத்தர் சீட்டுக்களை தயாரித்தல், அபிவிருத்தி செய்தல், அச்சிடல் மற்றும் விறியோகிப்பதற்கான பெறுகை**

அபிவிருத்தி லொத்தர் சபையால் கணணிசார்ந்த சீட்டிழுப்புக்களான லக்கின அதி'டம், கப்ருக, அத கோடிபதி, சுப்பர் போல், சசிரி, சனிதா, சுபிரி தன சம்பத லொத்தர் சீட்டுக்கள் மற்றும் புதிய சீட்டிழுப்பு லொத்தர் இலக்கம் 01 (ஜய சம்பத்) மற்றும் புதிய சீட்டிழுப்பு இலக்கம் 02 போன்ற லொத்தர் சீட்டுக்களை ஒரு வருட காலத்திற்குத் தயாரித்தல், அபிவிருத்தி செய்தல், அச்சிடல் மற்றும் விநியோகிப்பதற்கான பெறுகைக்கு தேசிய போட்டி விலைமுறி முறைமையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 07 விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதற்கிணங்க, உயர்மட்ட பெறுகைக் குழுவின் விதந்துரையின் அடிப்படையில் கணிசமான பதிலளிப்புக்களை சமர்ப்பித்துள்ள கீழ்வரும் குறைந்த விலைமனுதாரர்களுக்கு குறித்த பெறகைகளை வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| விலைமனுதாரரின் பெயர் | லொத்தர் சீட்டின் வர்த்தக நாமம் |
|---|---|
| Toppan Forms (Colombo) Ltd | லக்கின அதி'டம் மற்றும் கப்ருக |
| DPJ Holding (Pvt) Ltd | அத கோடிபதி, சுபர் போல், சனிதா, சுபிரி தன சம்பத |
| Grand Export (Pvt) Ltd | சசிரி |
| Digiscan Secure Print Solutions (Pvt) Ltd | புதிய சீட்டிழுப்பு லொத்தர் இலக்கம் 01 (ஜய சம்பத்), புதிய சீட்டிழுப்பு இலக்கம் 02 சீட்டு |

**09. வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான மேலதிக நிதியொதுக்கீடு செய்தல்**

கிராமிய வீதிகள் மற்றும் கிராமிய பாலங்களை மேம்படுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள 14,000 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில், 11,500 மில்லியன் ரூபாய்கள் கிராமிய வீதி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பின்னர் குறித்த வேலைத்திட்டத்திற்காக மேலும் 5,000 மில்லியன் ரூபாய்கள் நிதியொதுக்கீட்டை வழங்குவதற்கு 2025.08.11 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. கிராமிய வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் மூலம் அந்தந்த மாவட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு அடையாளங் காணப்பட்டுள்ள மொத்தக் கருத்திட்டங்களின் பெறுமதி 26 பில்லியன் ரூபாய்களாகும். குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, 2025 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உள்நாட்டு நிதியொதுக்கீடுகளை முகாமைத்துவப்படுத்தி மேலும் 6,000 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு கிராமிய வீதிப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. தம்புள்ள கைத்தொழில் பேட்டையை அமைத்தல்**

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் "பிராந்திய கைத்தொழில்பேட்டை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்" கீழ் நாடளாவிய ரீதியில் 33 கைத்தொழில் பேட்டைகள் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், புதிய 07 கைத்தொழில் பேட்டை அபிவிருத்திப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உணவு உற்பத்தி மற்றும் உணவுப் பொதியிடல் தொழிற்றுறைக்காக விசேட கைத்தொழில் பேட்டையாக தம்புள்ள கைத்தொழில் பேட்டையை அமைப்பதற்கு அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்காக, தம்புள்ள பிரதேச செயலகப் பிரிவில் அலென் எகொடயாய கிராமத்தில் 64 ஏக்கர் 02 றூட் 10.2 பேர்ச்சர்ஸ் காணி தற்போது அடையாளங் காணப்பட்டுள்ளது. உத்தேச கைத்தொழில் பேட்டைக்கு முதலாம் கட்டமாக 24 ஏக்கர் காணியும் மற்றும் எஞ்சிய காணி இரண்டாம்

கட்டமாக அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, தம்புள்ள கைத்தொழில் பேட்டையை அமைப்பதற்காக குறித்த கைத்தொழில் பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2025 ஆம் ஆண்டின் நிதியொதுக்கீட்டில் 750 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. அவிஸ்ஸாவெல்ல நீர் வழங்கல் திட்டத்திற்காக நாளொன்றுக்கு 5,000 கனமீற்றர் கொள்ளவுடைய நீர்சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்தல்**

அவிஸ்ஸாவெல்ல நீர் வழங்கல் திட்டத்திற்காக நாளொன்றுக்கு 5,000 கனமீற்றர் கொள்ளவுடைய நீர்சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு தேசிய போட்டி விலைமுறி முறைமையைக் கடைப்பிடித்து விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. குறித்த பெறுகைக்காக பத்து விலைமனுதாரரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர். உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழு மற்றும் பெறுகை மேன்முறையீட்டுச் சபையின் விதந்துரைகளின் அடிப்படையில் கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்த விலைமனுதாரரான M/s Sierra Construction Limited இற்கு அவிஸ்ஸாவேல்ல நீர் வழங்கல் திட்டத்திற்காக நாளொன்றுக்கு 5,000 கனமீற்றர் கொள்ளவுடைய நீர்சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் வைபவத்தை நடாத்துதல்**

இலங்கையின் இலத்திரனியல் ஊடக நிகழ்ச்சித்திட்டங்களின், அச்சு ஊடக மற்றும் இணையத்தளங்களில் உள்ளடக்கங்கள் பொறுப்புடனும், சுயாதீனமாகவும் மற்றும் நேயர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு கூருணர்வு மிக்க வகையில் பேணிச்செல்லும் நோக்கில் ஊடகவியலாளர்களை ஊக்குவிப்பதற்காக ஜனாதிபதி ஊடக விருது வைபவம் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு வந்துள்ளது. ஆனாலும், 2019 ஆம் ஆண்டின் பின்னர் குறித்த விருது வழங்கும் வைபவம் நடாத்தப்படவில்லை. குறித்த விருது வழங்கும் வைபவத்தை இவ்வாண்டு தொடக்கம் மீண்டும் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக, 2023 ஆம் ஆண்டுக்குரிய ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய, 2025.11.11 அன்று ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் வைபவத்தை நடாத்துவதற்கும், அங்கு வெற்றியாளருக்கு வழங்கப்படுகின்ற பணப்பரிசை ரூபா. 100,000 வரைக்கும் மற்றும் வாழ்வில் ஒருதடவை மாத்திரம் வழங்கிக் கௌரவிக்கும் வாழ்நாள் விருதுக்கு வழங்கும் பணப்பரிசை 400,000 ரூபாய்களாக அதிகரிப்பதற்கும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 13. தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள சுகாதார உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டங்களை மீண்டும் ஆரம்பித்தல்

கொவிட் 19 தொற்று நிலைமையாலும், அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாலும் சுகாதார சேவை நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்டு வந்த 33 அபிவிருத்திக் கருத்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. தற்போது காணப்படுகின்ற சுகாதார சேவை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அதிகரித்து வருகின்ற சேவை கேள்வி நிலைமைகளை கருத்தில் கொள்ளும் போது குறித்த கருத்திட்டங்கள் சரியான வகையில் பூர்த்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது. குறித்த கருத்திட்டங்களில் 17 கருத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர், கருத்திட்ட இடைநிறுத்தம் மற்றும் பணவீக்க நிலைமைகளின் அடிப்படையில் கட்டுமானப் பொருட்கள் மற்றும் தொழிலாளர் வேதனம் போன்ற செலவுகள் அதிகரித்துள்ளமையால் குறித்த கருத்திட்டங்களின் மொத்தச்செலவு மதிப்பீடு மற்றும் கருத்திட்டக் காலத்தை திருத்தம் செய்ய வேண்டியமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவால் வழங்கப்பட்டுள்ள விதந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, குறித்த கருத்திட்டங்களின் மொத்தச் செலவு மதிப்பீட்டைத் திருத்தம் செய்வதற்கும் கருத்திட்ட காலப்பகுதியை நீடிப்பதற்கும் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 14. "ஒலிம்பிக் செயற்பணி" வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

தற்போது விசேட திறமைகளைக் காண்பித்துள்ள வீர வீராங்கனைகள் மற்றும் எதிர்வரும் காலங்களில் ஒலிம்பிக் எதிர்பார்ப்புக்களை வைத்திருக்கின்ற வீர வீராங்கனைகளை அடையாளங் கண்டு அவர்களுக்குத் தேவையான நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்காக "ஒலிம்பிக் செயற்பணி" – Mission Olympics 2028- Journey to the Rings" வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இளைஞர் விவகார அமைச்சு திட்டமிட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தின் மூலம் விளையாட்டுக்கள் மூலம் சர்வதேச வெற்றிகளைப் பெற்றுக்கொள்வதற்கும், ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பதக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமைகள் மற்றும் திறமைகளுடன் கூடிய வீர வீராங்கனைகளை அடையாளங் கண்டு, அவர்களை நீண்டகால முறையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விசேட நிபுணத்துவப் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதற்கமைய, அவ்வாறான வீர வீராங்கனைகளுடன் எதிர்வரும் 2028 இல் லொஸ் ஏன்ஜலிஸ் ஒலிம்பிக் போட்டி வரைக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டு, பயிற்றுவிப்பதற்குத் தேவையான நித மற்றும் ஏனைய அனுசரணைகளை வழங்குவதற்கு இயலுமாகும் வகையில் "ஒலிம்பிக் செயற்பணி" வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 15. புதிய தேசிய குடிசன தொகைமதிப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தல்

இலங்கையில் தொகைமதிப்பை மேற்கொள்வதற்காக வலுவிலுள்ள முக்கிய சட்டகமாக 1900 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க குடிசன தொகைமதிப்புக் கட்டளைச் சட்டமாகும். 1935 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க

குடிசன தொகைமதிப்புக் கட்டளைச் சட்டத்தின் மூலம் இலங்கையில் உத்தியோகபூர்வ குடிசன புள்ளிவிபரங்களைத் திரட்டல், தயாரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் போன்ற விரிவான நியதிச்சட்டகம் நிறுவப்பட்டுள்ளது. ஆயினும். சமகால சட்டம், குடிசன புள்ளிவிபரங்களை தயாரிக்க அனைவருடனும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல், நிருவாக மற்றும் மாற்று தரவு மூலாதாரங்களை ஒருங்கிணைத்தல் அல்லது சுயாதீனம், பக்கச்சார்பற்ற தன்மை மற்றும் தரவுகளை உறுதிப்படுத்துகின்ற கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்குப் போதுமான பின்னணியை வழங்கவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. அதனால், ஐக்கிய நாடுகள் சபையின் குடிசன தொகைமதிப்புப் பிரிவின் நிபுணர் ஒருவரின் தொழிநுட்ப வழிகாட்டலின் கீழ், குடிசன மற்றும் தொகைமதிப்பு புள்ளவிபரவியல் திணைக்களத்தின் அலுவலர்களுடன் கூடிய குழுவொன்றின் மூலம், சர்வதேச விசேட நிபுணத்துவ அறிவு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களின் அறிவுடன் ஒருங்கிணைத்து உலகளாவிய ரீதியில் நிரந்தர மற்றும் தேசிய ரீதியில் இணங்கியொழுகும் வகையில் தேசிய குடிசன தொகைமதிப்பு அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. உத்தேச அடிப்படைச் சட்டமூலத்தின் மூலம் இலங்கையின் உத்தியோகபூர்வ குடிசன புள்ளிவிபரங்களைத் திரட்டல், தயாரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் போன்றவற்றுக்கான சட்டத்தை நவீனமயப்படுத்தி ஒருங்கிணைத்து, உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களை தயாரிப்பவர்கள் அனைவருடன் கூடிய தேசிய குடிசன தொகைமதிப்பு முறைமையை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, 1900 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க குடிசன தொகைமதிப்புக் கட்டளைச் சட்டம் மற்றும் 1935 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க புள்ளிவிபரக் கட்டளைச் சட்டத்தை இரத்துச் செய்து, ஏற்புடைய அடிப்படை சட்டமூலத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 16. 1973 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்

1973 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டம், சமகால சமூக மற்றும் கலாச்சார போக்குகளை எடுத்துக்காட்டும் வகையில் காலத்தோடு தழுவியதாக மேம்படுத்தப்படவில்லை. சமகால தொடர்பாடல் தொழிநுட்ப வளர்ச்சியுடன் பத்திரிகை மற்றும் வானொலிக்கு அப்பால், தொலைக்காட்சி, இணையத்தளம் மற்றும் சமூக ஊடக வலையமைப்புக்கள் மிகவும் துரிதமாக மக்களிடையே பரவலடைந்துள்ளது. அதனால், மக்களுடைய வாழ்விலும் முக்கிய தாக்கங்களைச் செலுத்துகின்றன. அதற்கமைய, ஏதேனுமொரு பத்திரிகைச் செய்தியொன்று ஏதேனும் இலத்திரனியல் ஊடகத்தின் மூலம் ஒலி/ஒளிபரப்பப்பட்ட பின்னர், குறித்த செய்தி தொடர்பாக பத்திரிகைப் பேரவையால் நடாத்தப்படும் விசாரணையின் போது, அவ்விசாரணையின் விளைவாக தீர்மானிக்கப்பட்ட நிவர்த்தி செய்தல்/உடன்பாடு/கட்டளைகளும், ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட செய்தி, இலத்திரனியில் ஊடகங்கள் வாயிலான ஒலி/ஒளிபரப்பட்ட செய்தி, மற்றும் அச்சிடப்பட்ட பத்திரிகைகளில்/சஞ்சிகைகளில் இலத்திரனியல் வெளியீடுகள் அல்லது அச்சிடப்பட்ட பத்திரிகைச் செய்தி வடிவில் வெளியிடப்படும் இலத்திரனியல் பத்திரிகைகள் அல்லது சஞ்சிகை பதிவு செய்தல் மற்றும் அவை தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல் போன்ற முக்கிய விடயங்கள் பற்றிய ஏற்பாடுகளை உள்ளடக்கி வகையில், 1973 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**17. பெற்றோர் பாதுகாவலர் பாதுகாப்புக்காக புதிய சட்டமொன்றை இயற்றுதல்**

இலங்கையில் மாற்று வழிப் பாதுகாப்புத் தேவையுள்ள அனைத்துப் பிள்ளைகளையும் உள்ளடக்கியவாறு பெற்றோர் பாதுகாவலர் பாதுகாப்பு பற்றிய முறைசார்ந்த, சட்டரீதியான ஏற்பாடுகள் இதுவரை நடைமுறையில் இல்லாமை கண்டறியப்பட்டுள்ளது. அதனால், சமகாலத் தேவையாகவுள்ள குடும்பமட்ட மாற்றுவழிப் பாதுகாப்பு முறையாகவுள்ள ஊட்டமளிக்கும் பாதுகாப்பு (பெற்றோர் பாதுகாவலர் முறை) எண்ணக்கருவை நடைமுறைப்படுத்தும் நோக்கில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் பெற்றோர் பாதுகாவலர் பாதுகாப்புப் பொறிமுறையொன்றை நிறுவுவதற்காக கருத்தாக்கப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த உத்தேசப் பொறிமுறை மூலம், பெற்றோர் பாதுகாவலர் பாதுகாப்பு முறையை தாபித்தல் மற்றும் தொலைதூரப் பெற்றோர் பாதுகாவலர் ஒத்துழைப்புக்கள் போன்ற முக்கிய இரண்டு முறைகளின் கீழ் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, குறித்த கருத்தாக்கப் பத்திரத்தின் அடிப்படையில், பெற்றோர் பாதுகாவலர் பாதுகாப்புக்காக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக பதில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**18. (278 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கைக் கலைக்கழகச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

நுண்கலைகளின் அபிவிருத்தி, தனித்துவக் கலை மற்றும் தொழிற்றுறை அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்புக்களும், குறித்த அனைத்து விடயங்களிலும் அல்லது அரச திணைக்களங்கள், பிரதேச சம்மேளனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு (278 ஆவது அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கைக் கலைக்கழகச் சட்டத்தின் மூலம் இலங்கைக் கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. தற்போது கலைத்துறையில் உருவாகியுள்ளதும், உருவாகி வருகின்றதுமான தேவைகள் மற்றும் விரிவாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, கலை கலாச்சாரத் துறைகளின் அபிவிருத்திக்கு அவசியமான கலைக் கல்வி மற்றும் கலைகளைப் பாதுகாக்கும் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கும், தரப்பண்புடன் கூடிய கலை ஆராய்ச்சிகள் மற்றும் படைப்புக்களுக்கான அனுசரணை நிதியத்தைப் பேணிச் செல்லல் உள்ளிட்ட நிதிநிலைமையைப் பேணிச் செல்வதற்கு இயலுமை கிட்டும் வகையில் சமகால கலைகழகச் சட்டத்தில் திருத்தங்களை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், கலைஞர்களின் தொழில் பாதுகாப்பு, மதிப்பு மற்றும் நல்லாரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கான தலையீடுகளுக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இச்சட்டத் திருத்தத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்குரிய திருத்தங்கள் சில இலங்கைக் கலைக்கழகத்தால் விதந்துரைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய,இலங்கைக் கலைக்கழகத்தை நிறுவும் போதுள்ள நோக்கம் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக (278 ஆவது அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கைக் கலைக்கழகச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**19. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் பதவியில் கடமையாற்றிய யூ.பி.ரோஹண ராஜபக்‘ அவர்களின் பதவிக்காலம் 2025.10.08 அன்று நிறைவடையவுள்ளது. அதற்கமைய, தற்போது கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றுகின்ற இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான ஆர்.ஏ.டீ.எஸ்.ரணதுங்க அவர்கள் 2025.10.09 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**20. 2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 2025.07.01 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்பதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**குறிப்பு:- தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களிடையே ஏதவாது வேறுபாடுகள் இருப்பின் சிங்கள மொழியே மூலமாக அமையும்**